Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49


நங்கையர் விரும்பும் அழகிய தங்கபபவுண் நகைகளை தயாரித்து அளிப்பவர்கள்

ஓடர் நகைகள் உடனுக்குடன் செய்து தருவோம்

விஜயலெட்சுமி ஆபரண மாளிகை

ஆஸ்பத்திரி வீதி, உசூர்காவறுறை

மலர் 7 ... குரோதி மாசி 18 ஆம் நாள் ஷவ்வால் பிறை 26 (1 3 65) திங்கட்கிழமை இதழ் 21

# யாழ்ப்பாணத்தில் இராணுவ பொலிஸ்

1965 66ம் ஆண்டு பட்ஜட்

## இந்திய முப்படைச் செலவு 748 கோடி ரூபாய்

### சென்ற ஆண்டைவிட 32 கோடி ரூபாய் அதிகரிக்கப்பட்டது

புதுடில்லி, பெப். 28

இந்தியாவின் 1965, 66-ம் ஆண்டு பட்ஜட்டின்படி முப்படைகளுக்கான செலவு 748 கோடி ரூபாய். சென்ற ஆண்டைவிட இது 32 கோடி ரூபாய் அதிகமாகும்.

புதிய பட்ஜட் யோசனையின் மூலம் வரத்துக்கள் மூலம் ... உற்பத்தியையும் அதிகரிக்க வழிசெய்யும் என ... பார்க்கப்படுவதாய் நிதி அமைச்சு அதிகாரிகள் கூறினர். வரி விதிப்பு குறைக்கப்பட்டதை அடுத்து, மூலீடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கணக்கில் வராத பணத்திற்கு 60 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இச்சவிகிதத்தை அரசாங்க வங்கியில் கட்டிவிட்டு, மிகுதித் தொகையை நிதி அமைச்சுக்கு அறிவித்தால் கணக்கில்வராத வருமானத்தை வைத்திருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என நிதிமந்திரி பட்ஜட் பிரசங்கத்தில் அறிவித்தார். ஆனால் இச்சலுகை 3 மாதங்களுக்கு மட்டுமே உண்டு.

குறிப்பிட்ட காலத்திற்குப் பின் கள்ளப்பணத்தைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

முதல் டெஸ்ட்

## இந்தியா முதல் இன்னிங்ஸ் 397 ரன்கள்; நியூஸிலந்து 35

சென்னை, பெப். 28

இந்தியாவுக்கும் நியூஸிலாந்திற்குமிடையில் நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா தன் முதல் இன்னிங்ஸில் 397 ரன்கள் எடுத்து அவுட் ஆனது.

நேற்று சென்னை கோபுல்டே ... இரு நாடுகளுக்கும் இடையே 4 நாள் டெஸ்ட் போட்டி ஆரம்பமாகியது. நேற்றைய ஆட்ட முடிவில் இந்தியக்கோஷ்டி 6 விக்கட் நஷ்டத்திற்கு 225 ரன்களும், இன்றைய ஆட்டத்தில் 172 ரன்களும் எடுத்தது.

இன்றைய ஆட்டத்தில் இந்தியக்கோஷ்டியைச் சேர்ந்த என்ஜினியர் அபாரமாக விளையாடினார் வயிற்றில் அவருக்குப் பந்து பட்டு சிறிது நேரம் கீழே விழுந்து கிடந்தார். என்ஜினியரை எடுத்துச் செல்ல அம்புலன்ஸ் அழைக்கப்பட்டபோது, மீண்டும் சமாளித்து எழுந்து, தொடர்ந்து தாக்கி ஆடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

இச்செய்தி அச்சாகும்போது நியூஸிலாந்துக் கோஷ்டி தன் முதல் இன்னிங்ஸில் 35 ரன்கள் எடுத்திருந்தது.

## பொதுத்தேர்தல் ஏற்பாடுகளைக் கவனிக்க பூர்வாங்க ஒழுங்குகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

**இம்மாதம் 22 ம் திகதி நடைபெறும் இலங்கையின் ஆறாவது பொதுத் தேர்தலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. தேர்தலையொட்டி இராணுவ பொலிஸார் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.**

வட்டப்பகுதியில் அமையும் வாக்களிப்பு நிலையங்கள் சம்பந்தமான ஏற்பாடுகளை அவ்வப்பகுதி காரியாதிகாரிகள் கிராம சேவையாளர்கள் மூலமாகச் செய்துள்ளனர். ஒவ்வொரு தொகுதியிலும் சட்டமையாற்ற 60 பொலிசார் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கொழும்பிலிருந்து சென்றவார இறுதியில் இராணுவ பொலிஸ் கோஷ்டி ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

தற்காலிகமாக அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களும் மற்றைய வாக்களிப்பு நிலையங்களும் இம்மாதம் 19-ம் திகதி முதல் பொலிசாரின் பாதுகாப்புக்குள்ளாக்கப்படும்.

வடபகுதித் தொகுதிகளில் சுமார் 8500 பேர் தபால்மூலம் வாக்களிக்கும் உரிமை பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்குரிய வாக்களிப்புச் சீட்டுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவர்கள் தமது வாக்குகளை இம்மாதம் 20-ம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

வாகன உபயோகம் பற்றிய சில சந்தேகங்களை சில கட்சிகள் தேர்தல் கமிஷனரிடம் கேட்டுள்ளன. பொதுத் தேர்தலுக்கு முன்னர் எங்கும் எதுவித அசம்பாவிதமும் ஏற்படாமல் ஜாக்கிரதையாக இருக்கும்படி பொலிசார் கேட்கப்பட்டுள்ளனர். பொலிசாருக்கு தேர்தல் முடியும்வரை லீவு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல கிராம சேவையாளர்களுக்கும் லீவு வழங்கப்படமாட்டாது.

## இன்று சிவராத்திரி

### பல இடங்களில் விசேஷ நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

இன்றிரவு சைவமக்கள் சிவராத்திரி விழாவைக் கொண்டாடுகின்றார்கள். சைவாலயங்கள் பாடசாலைகள் சமய சங்கங்கள் என்பனவற்றில் சிவராத்திரியையொட்டி விசேஷ நிகழ்ச்சிகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் தெற்கு ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிவராத்திரி விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று பகல் சகஸ்ரசங்காபிஷேகமும், இரவு முத்தமிழ்ச் செல்வி ராதா சோமசுந்தரம் ஆசிரியர் ... பிரசங்கம் ... சொற்பொழிவுகளும், மேளக்கச்சேரியும் நடைபெறும்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இந்துசமய விருத்திச் சங்கமும் சிவராத்திரி விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது. சொற்பொழிவுகள், தேவாரப் பண்ணிசை, அண்டாமசங்கீர்த்தனம் என்பன இடம்பெறும்.

காரைநகர் பயரிக்கூடல் சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் கூட்டுப்பிரார்த்தனை, நாதசங்கீத இசை, உபந்நியாசம், விசேஷ அபிஷேக ஆராதனை முதலியன நடைபெறவிருக்கின்றன.

## 'கிரக மண்டல'த்தில் தமிழிலும் விளக்கம் தேவை

### பொருட்காட்சி அதிபரிடம் கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு கைத்தொழில் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள கிரகமண்டலத்தில் தமிழ் விளக்கம் எதுவும் இடம்பெறாததால் இங்கு வரும் தமிழ் மாணவர்கள் பெரிதும் ஏமாற்றமடைகின்றனர் இது சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுத்து தமிழிலும் விளக்கவுரை கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யுமாறு கைத்தொழில் பொருட்காட்சி அதிபரை பலர் கேட்டுள்ளனர்.

தூர இடங்களிலிருந்து குறிப்பாக கிரகமண்டலத்தைப் பார்க்கவரும் தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

கைத்தொழில் பொருட்காட்சியில் குறிப்பாக கிரகமண்டலக் காட்சிக்கே தினமும் ஏராளமான பேர் வருகின்றனர். இக்காட்சியைப் பார்ப்பதற்கு நீண்ட 'கியூ' வரிசை தினமும் காணப்படுகிறது. சுமார் 4 மணித்தியாலங்கள் வரை பொதுமக்கள் 'கியூ' வரிசையில் நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

'விசேஷ ரயில் வேண்டும்'

கைத்தொழில் பொருட்காட்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'திருவாளர் 20லட்சம்'

### இன்று கைத்தொழில் பொருட்காட்சிக்கு விஜயம் செய்வார்

கொழும்பு, திங்கள்

கொழும்பில் நடைபெறும் கைத்தொழில் பொருட்காட்சிக்கு 20 லட்சம் எண்ணிக்கை கொண்டவர் இன்று வரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. நேற்றுவரை காட்சிக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 18 லட்சத்தைத் தாண்டிவிட்டது.

கைத்தொழிற் பொருட்காட்சிக்கு ஒரேநாளில் விஜயஞ் செய்தவர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை 1,65,000 ஆகும். 20 லட்சம் எண்ணிக்கை கொண்டவர் இன்று காட்சிசாலை அதிபரினாலும், அதிகாரிகளினாலும் வரவேற்கப்பட்டு வெளிநாட்டுக் கண்காட்சிசாலைகளுக்கு அழைத்துச்செல்லப்படுவார். அங்கு அவர் கௌரவ விருந்தினராக வரவேற்கப்படுவார்.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்கப் பொருட்காட்சி மார்ச் 10ந் தேதிவரை நீடிக்கப்பட்டிருப்பதும் இந்த நீடிப்பை வெளிநாட்டுக் காட்சி ஏற்பாட்டினர்கள் பலர் ஏற்றிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

மணிமொழி

இப்பொழுது கெட்டவனாகக் காணப்படுபவனே பிற்காலத்தில் ஞானியாவான். தீமை என்பது வெறும் தோற்றம் மாத்திரம்தான். அது உண்மையாயிருப்பதில்லை, கெடுதலிலிருந்து நன்மை உண்டாகிறது. எல்லாவற்றிலும் நன்மையை மாத்திரமே பார்த்துப்பழகு.

— சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 18 உ (1 3-65)

## இந்தியா வரவு-செலவுத் திட்டம்

இந்திய அரசாங்கத்தின் அடுத்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் பத்து கோடி ரூபாய் மேல் மிச்சம் ஏற்படுமென எதிர்பார்த்துள்ளதுடன் இருநூறு ரூபாய்க்கு மேல் வரிச் சலுகைகளையும், இறக்குமதிச் சலுகைகளையும் அளித்துள்ளனர். நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தும், இருநூறு கோடி ரூபாய்க்குமேல் மிச்சம் ஏற்படும்படியாக இருப்பதிலிருந்து இந்திய அரசாங்கத்தின் நிதிநிலைமை மேலாக இருப்பது தெரிகின்றது.

நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி சமர்ப்பித்த திட்டப்படி, அடுத்த நிதி வருடத்தில் எதிர்பார்க்கும் மொத்த வருமானம் 2353 கோடி. எதிர்பார்க்கும் செலவு 2116 கோடி. இச்செலவில் இராணுவ பாதுகாப்புக்காக 748 கோடி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது நடப்பு வருடத்தைவிட இராணுவச் செலவு 82 கோடி அதிகரிக்கின்றது. ஒரு பக்கம் சீனம் மறுபக்கம் பாகிஸ்தான் இவ்விரு அண்டைநாடுகளுடனும் இந்தியாவின் உறவுகள் விரும்பத்தக்கபடி இல்லாததாலும், அவசரகால நிலைமை நீடிப்பதாலும் இராணுவச்செலவை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகச் சமாதானம் கூறப்படலாம். என்றாலும் மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை இராணுவ பூதம் விழுங்குவதும், இப்பூதத்தின் பசி வரவர அதிகரித்து வருவதும் நிம்மதி அளிக்கக் கூடிய நிலையாகாது.

சீனம் அணுகுண்டை உற்பத்தி செய்தாலும், தாங்கள் அதைச்செய்யக்கூடிய நிலையிலிருந்தும் அந்தக் குண்டைத் தயாரிக்கப்போவதில்லை என்று இந்தியா சரியாகத் தீர்மானித்துள்ளது. இதனால் சீனத்தின் இராணுவபலம் ஓங்குவதாக இருப்பினும், மனித வர்க்கத்தின் மேலான நன்மையைக் கருதி, அணுகுண்டு உற்பத்திப் போட்டியில் இந்தியா சேராமல் ஒதுங்கியுள்ளது பாராட்டத் தக்கதே. ஆனால் இதே சமயம் இராணுவத்துக்காகவும், ஆயுதங்களுக்காகவும் இந்தியா தன் மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் செலவிடவேண்டியுள்ளதுபற்றி வினோபாபாவே போன்ற காந்தீய வாதிகள் என்ன கருதுகிறார்களோ! ஒவ்வொரு பைசாவும் மக்களின் நன்மைக்காகச்செலவிடப்பட வேண்டியிருக்க சுமார் 750 கோடி ரூபாய்களை இராணுவத்துக்கும் ஆயுதங்களுக்கும் செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது மேலான முன்மாதிரியாகாது.

இதற்குக் காரணம் எதுவாக இருப்பினும், சீனம், பாகிஸ்தான் முதலிய அண்டைநாடுகளுடன் உள்ள பிரச்னைகளை, சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளவும், அவற்றுடன் மேலான நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ளவும் இந்தியா முன்னைவிட அதிக முயற்சிகளைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர் சாஸ்திரி, எந்த சிக்கலான பிரச்னைகளையும் சமரசமாகத் தீர்ப்பதில் புகழ் பெற்றவர். இவ்விரு பிரச்னைகளையும் நல்ல முறையில் தீர்க்கவும், இராணுவச் செலவை குறைக்காவிடினும் அதிகரிக்காமலாவது செய்யவும் வேண்டிய அவசியத்தை அவர் நன்கு உணர்ந்திருப்பார்; இவ்விஷயத்தில் இலங்கைக்கும் அதிக அக்கறையுண்டு. மூன்று நாடுகளுடனும் நல்லுறவு கொண்டிருக்கும் இலங்கை இப்பிரச்னையைச்சுமுகமாகத் தீர்க்கசேவை செய்யமுடியுமாயின், அது தனக்குத்தானே மேலான நன்மை செய்து கொண்டதாகும். இந்தியா உள்ளிட்டு ஆசியா மக்களின் சுபீட்சமும் இதில்தான் பெரிதளவாக அடங்கி இருக்கிறது.

# உருத்திரபுரம் புராதன சிவாலயம்

**மஹாசிவராத்திரியை முன்னிட்டு உருத்திரபுரம் சிவாலயம் உருவாகிய வரலாற்றுச் சுருக்கம் இங்கு வெளியிடப்படுகிறது.**

— திரு. த. நல்லதம்பி —

( காரியதரிசி, உருத்திரபுரம் புனருத்தாரணசபை. )

ஈழவளநாட்டின்கண் திருவருள் பாலிப்பான்வேண்டி இறைவன் கோயில்கொண்டருளியிருக்கும் புராதன சிவத்தலங்களுள் உருத்திரபுர சிவாலயமும் ஒன்று. ஈழத்தின் கரையோரங்களை அடுத்து கதிர்காமம், முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், செல்வச்சந்நிதி, நல்லூர், திருக்கோவில் ஆகிய புராதன திருத்தலங்கள் இந்து மக்களின் முக்கிய யாத்திரை ஸ்தலங்களாக விளங்கிவருவது போல் இச்சிவாலயமும் வட இலங்கையில்வன்னிப்பகுதியில் பூநகரிக் கடற்கரை அண்மையில் கிளிநொச்சியிலிருந்து மேற்கே 6 மைல் தொலைவில் யாத்திரை ஸ்தலமாக விளங்கிய திருத்தலமாகும். அந்நியரின் படையெடுப்பால் அழிவுற்ற காலந்தொட்டு பெருங்காடுகள் மண்டி மலேரியா என்னும் கொடிய நோய் ரவி மக்கள் வதியமுடியாதநிலை எய்தியிருந்தமையால் இந்த உருத்திரபுரச் சிவாலயம் பல்லாண்டு காலம் கவனிப்பாரற்று இருந்திருக்கிறது. இலங்கை சுதந்திரமடைந்தபின் குடியேற்றங்களும் சில அபிவிருத்தி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டமை முன்னிட்டு இச்சிவாலயமும் புனருத்தாரணம் செய்யக்கூடியதாக இறைவன் திருவருள் கூட்டிவைத்தது.

சிவாலயத்துக்கு அண்மையிலுள்ள குஞ்சுபரந்தன் பூநகரி என்னும் பழைய கிராமத்து மக்கள் இவ்விடத்தை "உருத்திரபுரம்" என்று அழைத்தனர். இதன் அயலிலுள்ள 10ம் வாய்க்கால் குடியேற்றத்தில் குடியேறிய மக்களும் தங்கள் குடியிருப்புக்கு உருத்திரபுரம் என்று பெயரிட்டு வழங்கலாயினர். உருத்திரன் என்பது சிவனுக்குரிய பெயராதலால் சிவாலயம் இருந்த காரணத்தினாலேயே இவ்விடத்துக்கு உருத்திரபுரம் என்ற பெயர் வழங்க ஏதுவாயிற்று.

### ஆலயத்தின் புராதனம்

ஆலயச் சுற்றுப்புறங்களில் ஆங்காங்கு சிலமடைந்து கிடக்கும் கற்றூண்களும் படிக்கற்களும் நிலத்தின் கீழிருக்கும் வைரமான செங்கல் சுவர்களும் இதன் புராதனத்தை உணர்த்துகின்றன. இப்பொழுது கட்டப்பட்டுவரும் சிவாலயத்தின் மூலஸ்தானம் அமைந்திருக்கும் இடத்தில் அத்திவாரம் வெட்டியபோது வைரமான அகலமான சுற்றுச்சுவர்கள் நிலத்தின்கீழ் தென்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும், அன்றியும் இங்கு கண்டெடுக்கப்பட்ட ஆவுடையார் சற்சதுர வடிவமாகவும் மேல்கீழாக 3 பிரிவுகளையுடையதுமாக விளங்குகிறது. இதனால் இது இராஜ ராஜசோழன் காலத்ததாக இருக்கலாமெனவும் சோழமன்னர் காலத்தில் வன்னிப்பகுதி சைவசமய வளர்ச்சியில் உன்னதநிலை எய்தியிருந்தமையால் அக்காலத்திலேயே இவ்வாலயமும் கட்டப்பட்டிருக்கவேண்டுமெனவும் சிற்பக்கலை ஆராய்வுள்ளோர் கூறுவர். மேலும் இதன் தொன்மை பற்றிய வரலாறுகள் ஆராய்ச்சியாளரால ஆராயப்படவேண்டியதாகும்.

### லிங்கப் பிரதிஷ்டை: ஆலயம் கட்டுதல்

ஆலயம் இருக்கதாகக் கருதப்பட்ட இடத்தில் காட்டை அழித்து அத்திவாரமிட்டு ஆசனக்கல்லை மாத்திரம் கட்டியெழுப்பி அதில் அங்கு கண்டெடுக்கப்பட்ட ஆவுடையாரையும் அதற்கமைவாக அமைத்த லிங்கத்தையும் திருமுறை பாராயணத்துடன் பிரதிஷ்டை செய்தனர். ஆலயம் கட்டுவதன் முன்னர் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் இதைச் சுயம்பு லிங்கமாகப் பாவித்துக் காசியில் நடைபெறுவதுபோல் மக்கள் தாமாகவே ஆராதனை செய்யக் கூடியதாய் அமைப்ப நன்று என எண்ணி திருமுறைகள் ஓதி அபிஷேகம் செய்து எல்லோரும் புஷ்பாஞ்சலி செய்து வணங்கவும் ஆரம்பத்தில் இடமளிக்கப்பட்டது. ஆயினும் திருவருள் வசத்தால் சிவபுண்ணியப் பேறுடைய பெருமக்கள் சிலர் முன்வந்ததால் ஆகம விதிப்படி மூலஸ்தானம், அம்மன் மண்டபம், விநாயகர் ஆலயம் என்பன கட்டப்பட்டு மதுரையில் கைதேர்ந்த சிற்பவல்லுனரால் அமைக்கப்பெற்ற விநாயகர் ஸ்ரீமனோன்மணி அம்பாள் திருவுருவங்களை பல்வேறு சிரமங்களினூடே இங்கு வருவித்து 1955-ம் ஆண்டு பிரதிஷ்டையும் மகாகும்பாபிஷேகமும் இனிது நிறைவேற்றப்பட்டது. மகா கும்பாபிஷேகத்தின் பின்னர் ஆகம முறைப்படியே நித்திய நைமித்திய பூசைகள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. தற்பொழுது பிரம்மஸ்ரீ ப. சண்முகசுந்தரக் குருக்கள் ஆலயக் குருவாகவிருந்து பணியாற்றி வருகிறார்கள்.

### யோக சுவாமிகள் ஆசி கிடைத்தது

இவ்வாலயம் நிறுவுவதற்கான நிதிசேர்க்க ஆரம்பித்தபோது அருட்குரு யோகர்சுவாமிகளின் ஆசியுடன் கிடைத்த சிறுதொகைப் பணமே ஆரம்ப நிதியாக இருந்து இவ்வாலயம் கட்டி முடிக்கப்படவேண்டுமெனச் சுவாமிகள் மிகவும் ஆவல் கொண்டு புனருத்தாரணசபையினரை ஊக்கப்படுத்தி வந்தார்கள். ஆலயம் நிறுவுவதில் அயராது உழைத்தவர்களில் முக்கியமானவராகிய கலைப்புலவர் நவரத்தினம் அவர்களின் மறைவின் பின்னரும் ஆலயக்கருமங்களை புனருத்தாரணசபை தொடர்ந்து கவனித்து வருகிறது.

### திருப்பணி வேலைகள்

இன்னும் இவ்வாலயத்தில் பூர்த்தி பெறாத திருப்பணி வேலைகள் அனேகம் உள. மகாமண்டபம் சிலமட்டத்துக்கு மேல் சுவர் எழுப்பிய வண்ணம் குறையாக இருக்கிறது. இன்னும் ஸ்நபனமண்டபம், நந்தி, பலிபீடம் சபாமண்டபம், மடைப்பள்ளி சமுஞ்சிய அறை, மணிக்கூண்டுக் கோபுரம், திருமஞ்சனக்கிணறு ஆகிய முக்கிய திருப்பணிகளும் பிரகாரமூர்த்திகளுக்கான ஆலயங்களும் கட்டப்பட வேண்டியவையாயிருக்கின்றன. இக் கட்டடங்களை கட்டிமுடித்து மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வதற்கு நற்செல்வம் படைத்த சைவநன்மக்கள் பெருமனதோடு முன்வருவார்களாயின் இது இதைவில் பூர்த்திபெறும்.

# சிவராத்திரி

சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள்

முன்னொருகாலத்தில் உண்டாகிய மகாப்பிரளயத்திலே பிரமன் முதல் பிபீலிகைபரியந்தமுள்ள ஆன்மகோடிகள் எல்லாம் மாயையிலொடுங்க மாயை சிற்சக்தியில் ஒடுங்க, சக்தி சிவத்தில் ஒடுங்க, சிவம் ஒன்றே தனித்து நின்றது; அக்காலத்து சிவத்தின் வேறாகாது விளங்கும் தாதாம்மிய சக்தியென்னும் பராசக்தியாராகிய அம்மையார் காமிகாதி ஆகமவிதிப்படி சிவபெருமானை அருச்சனை புரிந்தனர். சாமம் நான்குஞ் சென்றபின் சோமசேகரனை பொற்குசினைப் பணிந்து நான் வழிபட்ட இன்றைய இராத்திரியை இனிவரும் விண்ணவரும், மண்ணவரும் சிவராத்திரியெனவும், இன்றிரவு முழுதும் அருச்சிக்கின்றயாவரும் தேவரீர் திருவடியை அடையவும், வரமருளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டபடி உமையவட்கு சர்வபூஷணை கிருபை சரந்தனர். ஆதலின் அன்று முதல் சிவராத்திரியெனப் பெயர் பெற்றது. இஃதன்றி வேறு காரணங்களும் உண்டு.

சோமவாரமும் (அவிட்ட நக்ஷத்திரமும்) திரயோதசியும்! அன்று இரவு சதுர்த்தசியும் வருவது கோடி சிவராத்திரியாகும்.

சோமவாரம் உதயம் தொடக்கி பகல் முழுவதும் திரயோதசியும்; சூரிய அஸ்தமனத்தின் மேல் சதுர்த்தசியும் வருவது யோக சிவராத்திரியென்றேபுகலும் அது உத்தமோத்தம சிவராத்திரி.

சோமவாரம்; உதய முதல் அடுத்தநாள் உதயம்வரையும் சதுர்த்தசி இருப்பின் அதுவும் யோகசிவராத்திரியென்றே புகலும். அது உத்தம சிவராத்திரி.

இவ்வாறாக மற்றைய நாட்களில் வருவது; மத்திம சிவராத்திரி.

இரவில் இருப்பது நாழிகை சதுர்த்தசி இருந்து பின்னர் அமாவாசை பொருந்த அதம சிவராத்திரியாம்.

மாசி அமரபட்சம் வரும் பிரதமை தொட்டுப் பதின் மூன்று நாள் தினம் ஒருவேளை புசித்துப் பதினான்காம் நாள் இரவு சதுர்த்தசியன்று நோற்பது பட்ச சிவராத்திரியாம்.

பன்னிரண்டு மாதமும் அமாவாசைக்கு முன்தினம் நோற்பது மாசசிவராத்திரியாம்.

வருடம்தோறும் அமரபட்சம், பூருவபட்சங்களில் வரும் இருபத்துநாலு சதுர்த்தசியிலும் நோற்பது நித்திய சிவராத்திரியாம்.

## ஊரான் எழுதுவது

கொழும்பில் நடைபெறும் கைத்தொழில் கண்காட்சியை இன்னும் ஒருவாரத்துக்கு அதாவது மார்ச் 10-ந் திகதி வரை நீடித்திருக்கிறார்களாம். வரவர கூட்டம் அதிகமாகி வருவதாயும் அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து அதிகமானவர்கள் செல்லுவதாகவும் ஓரன்பர் தெரிவிக்கிறார்.

அதிக செலவு செய்து கொண்டு ரயிலில் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு சென்ற ஒருவர் நான்குமுறை காட்சிக்குச் சென்றும் கிரகமண்டலக் கியூவரிசையில் நின்று அதைப் பார்க்கமுடியாமல் திரும்பிவிட்டதாகக் கூறுகிறார்.

அங்கு இன்னும் எல்லாம் தனிச்சிங்களம்தானாம். தேர்தல் முடிந்த பின்பாவது தமிழுக்கு சிறிது இடமாவது கிடைக்குமோ தெரியவில்லை.

அதுமட்டுமல்ல. இக்காட்சிசாலையில் நடக்கும் சினிமா விழாவிலும், சிங்களம், ஆங்கிலம், இந்திப்படங்கள் காட்டுகின்றார்களேயன்றி, ஒரு தமிழ்ப்படத்துக்கும் கூட இடமளிக்கவில்லை. தமிழை ஏன் இப்படி இவ்விஷயத்திலும் அலட்சியம் செய்து அவமதிக்க வேண்டும்!

* * *

யாழ்ப்பாணத்திலே மக்களுக்குப் பொழுதுபோக்க சினிமாவைத் தவிர வேறு வழியில்லை. இதுபெரிய குறை. மிருகக் காட்சிச்சாலை, குழந்தைகளுக்கான சினிமா, வேறு கண்காட்சி இவற்றுக்கு மாநகரசபை சிறிய அளவிலாவது இங்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வித காட்சிகளைப் பார்க்க ஆயிரக்கணக்கில் 250 மைல் தூரம் அதிக செலவுசெய்துகொண்டு மக்கள் செல்வதைப் பார்க்கையில், இங்கு ஏதாவது சிறிய அளவிலாவது செய்யவேண்டியிருப்பதை உணருகின்றோம். நம் நகர பிதாக்கள் இதைப்பற்றி சற்றே கவனமெடுப்பார்களா!

* * *

நேற்று ஒரு கோவில் குருக்கள் வந்தார். குழந்தைகுட்டிக்காரர். மாதச்சம்பளம் 60 ரூபாய்தானும். மேல்வரும்படி சுமார் பத்துரூபாய் கிடைக்கலாம். இதில் வீட்டுவாடகைக்காக முப்பத்தைந்து கொடுக்கிறாராம் வாடகைபோக அந்த வருமானத்தில் அவர் எப்படித்தான் இக்காலத்தில் காலட்சேபம் நடத்துகிறாரோ தெரியவில்லை. கேட்டதற்கு கடன்பட்டுத்தான் ஒருவிதமாக குடும்பத்தை நடத்துவதாகச் சொன்னார்.

இது மிக முக்கியமான விஷயம். குடும்ப காலட்சேபம் நடத்துவதற்கே குருக்கள்மார்களுக்கு போதிய வருமானமில்லாவிடில், அவர் நிம்மதியாக எப்படிப் பூசைசெய்ய முடியும்? இந்தச் சேவையைச் செய்ய யார்தான் மனமுவந்து முன்வருவார்கள்? சைவ சமய ஸ்தாபனங்களும், தலைவர்களும் இவ்விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தி, உடன் இக்குறையை நீக்க ஆவன செய்யவேண்டும். ஒரு சாதாரண கூலிவேலைக்காரருக்குக் கூட தினசரி 5 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. அப்படி இருக்கையில் முப்போதும் திருமேனி தீண்டி, கோவில் பணியையே நம்பி வாழும் குருக்கள்மார்களுக்கு போதிய வேதனம்

(5-ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க விமானங்களின் மாபெரும் தாக்குதல்

## வியட்காங் இலக்குகள் மீது நடத்தப்பட்டன

சைகோன், பெப். 28

**அமெரிக்க, தென்வியட்னும் விமானப்படைகள் நேற்று சைகோனுக்கருகில் வியட்காங் இலக்குகளின் மீது இதுவரை இல்லாத பெருமளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் 50 தாக்குதல்களை அவை நடத்தின என்றும் அறிவிக்கப்பட்டது.**

சுமார் 180 ஹெலிகொப்டர்களில் பல நூற்றுக்கணக்கான வீரர்கள் இறக்கப்பட்டதாயும், ஆனால் கொரில்லாக்களுடன் இதுவரை அவர்கள் தொடர்பு கொள்ளவில்லை என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

வடவியட்னும் அமைதித் தீர்வு ஒன்றுக்கு அக்கறை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை என அமெரிக்க பிரசார பிரதிநிதி திரு. ஸ்டீவன்சன் யுதாண்டுக்குத் தெரிவித்திருக்கிறார். அமெரிக்கப்படைகள் வியட்னுமிலிருந்து வாபஸ் பெறப்படவேண்டும் என்ற யுதாண்டின் யோசனைக்குப்பதிலளிக்கும் வகையிலேயே திரு. ஸ்டீவன்சன் இவ்வாறு பதிலளித்திருக்கிறார்.

நேற்று ரஷ்யப்பிரதமர் கோஸிஜினை மாஸ்கோவிலுள்ள இந்தியத்தூதர் மீண்டும் சந்தித்து தென்வியட்னும் பற்றிப் பேசினர்.

—

## தமிழர் கோரிக்கை நிறைவேறும்

சென்னை, பெப். 26

மொழிப் பிரச்னையில் தமிழ் நாட்டுமக்களின் கோரிக்கைகள் முற்றுமுழுதாக நிறைவேற்றப்படும் என்பது நிச்சயமானதாக சென்னை முதன்மந்திரி திரு பக்தவத்சலம் கூறினர். காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவும், முதன்மந்திரிகளை மகாநாடும், பிரதமர் சாஸ்திரி லோக்சபையில் விடுத்த அறிக்கையும் இந்த நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாய் இருக்கிறது என அவர் கூறினர்

—

## இந்திய பட்ஜட்

புதுடில்லி, பெப். 28

இந்திய நிதிமந்திரி திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்று லோகசபையில் சமர்ப்பித்த 1965 – 66ம் ஆண்டுக்கான பட்ஜட்டின்படி வருமானம் ரூ 2358 கோடி. செலவு ரூ. 2116 கோடி.

—

## கென்யாட்டா

நைரோபி, பெப். 28

கென்யா தலைவர் ஜோமோ கென்யாட்டா ஐ. நா. வுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறர். காங்கோ பிரச்னைதான் ஐ. நா. வுக்கு பெரிய தலையிடியாய் இருக்கிறது என்றும் அவர் கூறினர்.

—

## ஆஸ்திரேலியா வெற்றி

கிங்ஸ்டன், பெப். 28

ஜமாய்க்காவுக்கும், ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் 1 இன்னிங்ஸ் 6 ரன்களால் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. ஸ்கோர் விபரம் வருமாறு:

**ஆஸ்திரேலியா**

முதல் இன்னிங்ஸ் 6 விக்கெட் நஷ்டத்திற்கு 547 ரன்கள்.

**ஜமேக்கா**

முதல் இன்னிங்ஸ் 340 ரன்கள். 2-ம் இன்னிங்ஸ் 201 ரன்கள்.

## ரஸ்க் ஆலோசனை

வாஷிங்டன், பெப். 28

இந்தோனேஷியாவிலுள்ள அமெரிக்க சொத்துக்களை அந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டு விட்டதுபற்றி வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் நேற்று ஆலோசனை நடத்தினர்.

—

## அயூப் சீன புறப்பாடு

டாக்கா, பெப். 28

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் சீன செல்லும் வழியில் இன்று டாக்கா வந்தார். சீனவில் அவர் ஒருவாரம் அரசாங்க முறையில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

—

## பிரிட்டிஷ் பிரெஞ்சு விமான உற்பத்தி

லண்டன், பெப். 28

பிரிட்டனும் பிரான்சும் கூட்டாகச் சேர்ந்து ராணுவ விமானங்களை உற்பத்தி செய்ய விருப்பதாயும் 1970ம் ஆண்டுக்குள் 4000 விமானங்கள் உற்பத்தி செய்யப்படுமென்றும் பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி திரு ஹீலி அறிவித்தார்.

இத்திட்டத்தில் ஹாலந்து, இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளும் சேர்ந்துகொள்ளு மென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

—

## மந்திரிசபை நெருக்கடி

ஆம்ஸ்டர்டாம், பெப். 28

ஹாலந்தில் மந்திரிசபை நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

—

## ரயில் விபத்து 26 பேர் பலி

கார்டூம், பெப். 28

சூடானில் இரு ரயில்கள் மோதிக்கொண்டதன் விளைவாக 26 பேர் கொல்லப்பட்டனர்.

—

## "தியாகிகளுக்கு அஞ்சலி"

மாவிட்டபுரம், ஞாயிறு

அண்மையில் நடைபெற்ற மண்டைதீவு உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 14-வது பொதுச் சபைக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் இந்திய மத்திய அரசினரின் இந்தித்திணிப்பை எதிர்த்துப் போராடி வரும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தமிழ் மக்களுக்கும் மாணவ இயக்கத்திற்கும் தார்மீக ஆதரவைத் தெரிவித்துக் கொள்ளும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

மனித உரிமைக்குப் போராடிய மக்கள் மேல் மனிதாபிமானமற்ற முறையில் அடக்குமுறைகளைக் கையாண்டு பல உயிர்களைப் பலிவாங்கியதற்காகத் தமிழ்நாட்டு அரசாங்கத்தைக் கண்டிப்பதுடன் இந்தி ஏகாதிபத்திய மனப்பான்மையைக் கைவிடாது தமிழ்மக்களின் நீதியான கோரிக்கைகளை வழங்குமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

## ரஷ்ய தூதுகோஷ்டி

பம்பாய், பெப். 28

இந்தியா வந்திருக்கும் ரஷ்ய பாராளுமன்றத் தூதுகோஷ்டி நேற்று பம்பாய் டிராம்பே அணுசக்தி நிலையத்தைப் பார்வையிட்டது.

## கீரிமலை சிவனேரயில்

யாழ்ப்பாணம், திங்கள்

கீரிமலை சிவன்கோவிலில் வருடாந்த மகோற்சவம் தற்போது நடைபெற்றுவருகிறது. சிவராத்திரித் தீர்த்தத்துடன் செவ்வாயன்று உற்சவம் பூர்த்தியடைகிறது. இவ்வாலயத்தின் ரதோற்சவம் இன்று நடைபெறும். மாலையில் ரதோற்சவத்தைத் தொடர்ந்து சோமாஸ்கந்தப் பெருமானின் திருநடனத்தைச் சிறப்பாகச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அன்றிரவு சிவராத்திரியில் நான்கு ஜாமப்பூசைகளும், பஞ்சமுகார்ச்சனையும் நடைபெறும்.

திரு. வி. என். எஸ். மணி பாகவதரின் பெரியபுராணத் தொடர் கதாப்பிரசங்கமும் நடைபெற்றுவருகிறது.

—

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

காங்கேசன்துறை, ஞாயிறு

புங்குடுதீவு இறுப்பிட்டி சித்திவிநாயகர் வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் தலைமையாசிரியர் திரு. கா. சோமசுந்தரம் தலைமையில் மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார். போஷகர்: மா. முருகேசு உடையார், தலைவர்: கா. சோமசுந்தரம் (தலைமையாசிரியர்), உபதலைவர்: பி. கார்த்திகேசு, நிர்வாகக்காரியதரிசி: கு. பசுபதிப்பிள்ளை, க. கனகசுந்தரம், தனாதிகாரி: கு. வி. செல்வத்துரை. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

—

## ஆண்டுக்கூட்டத்தில் அமளி துமளி

### இறுதியில் கூட்டம் கலைக்கப்பட்டது

காங்கேசன்துறை, ஞாயிறு

சரவணை-வேலணை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 10-வது வருடாந்தக்கூட்டம் தலைவர் திரு. நா. நடராசா தலைமையில் நேற்று நடைபெற்றபோது ஒரு கட்டத்தில் அங்கத்தவர்களிடையே கருத்துவேற்றுமை ஏற்பட்டமையால் கூட்டத்தை நடத்த முடியாத நிலைமை தலைவருக்கு ஏற்பட்டது.

வடபகுதி கூட்டுறவு தலைமைக் காரியாலய பரிசோதகர்கள் திரு. வி. மகேந்திரன், திரு. வ. மயில்வாகனம், கூட்டுறவுப் பரிசோதகர் திரு. சி. சின்னையா ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல், பங்குத்தடவைப் பணத்தைக் கட்டத் தவறியவர்கள் கூட்டத்தில் சமூகம் கொடுத்தல் ஆகிய இருவிஷயங்களில் அங்கத்தவர்களிடையே கருத்து வேற்றுமை எழுந்தது. சங்கவிதிகளுக்கு அமைவாகவே கூட்டத்தை நடத்த வேண்டுமென அதிகாரிகள் விருப்பம் தெரிவித்தனர். கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மணித்தியாலமாகியும் அங்கத்தவர்களிடையே ஒற்றுமையை நிலைநிறுத்த முடியவில்லை. கூட்டத்தில் சமூகம் கொடுக்க முடியாத அங்கத்தவர்கள் வெளியேற மறுத்ததைத் தொடர்ந்து தலைவர் கூட்டத்தைக் கலைத்து ஒத்தி வைத்தார்.

# "தமிழ்பகுதியின் அபிவிருத்திக்கு கூட்டரசு பாடுபடவில்லை"

## கோப்பாய்க் கூட்டத்தில் தர்மலிங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

கூட்டரசாங்கம் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் மொழி, குடியுரிமை விஷயங்களில் வகுப்புவாத நோக்கோடு நடந்து கொள்வதுபோல பொருளாதாரத்துறையிலும் இதேயே கைக்கொள்ளுகின்றது" என்று உடுவில் முன்னாள் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கோப்பாயில் நடைபெற்ற தமிழரசுக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

கோப்பாய்த் தொகுதியில் தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் நியாயவாதி திரு. சி. கதிரவேலு பிள்ளையை ஆதரிக்கும்முகமாக கோப்பாய் நாவலர் பாடசாலைக்கருகில் டாக்டர் ஜீ. என். அருட்பிரகாசம் தலைமையில் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது.

திரு. வி. தர்மலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தன தமிழ்பேசும் மக்களின் கஷ்டத்திற்குக் காரணமாகும் மலைநாட்டுத் தமிழர் பிரச்னை, மொழியுரிமை, குடியுரிமைஎன பனபற்றிப் பேச்சு எடுத்ததும் கூட்டரசாங்கத்தினர் இது வகுப்புவாதப் பேச்சுகள் என்கினறனர்.

1956-ம் ஆண்டுக்குப்பின் 200 தொழிற்சாலைகளை இலங்கையில் நிறுவியிருப்பதாகக் கூட்டரசாங்கப் பிரமுகர்கள் கூறுகின்றனர். 200 தொழிற்சாலைகளில் ஒன்றினையாவது வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிறுவவில்லை. இடதுசாரிகளுக்கு நாட்டின் மீது உண்மையான அபிமானம் இருக்குமாயின் தமிழ்ப்பகுதியில் ஒன்றினை நிறுவியிருக்க முடியும். இவ்வாறு பாகுபாடாக நடந்து கொள்பவர்கள் உண்மையான சோஷலிஸ்டுகளல்ல.

பததிரிகை மகோதாவில் அரசாங்கத்தை எதிர்த்துவாக்களித்ததற்கும் நம்மீது கண்டனம் தெரிவிப்பவர்கள் தாம் எந்த நிலையில் இருந்தோம் என்பதனைச் சிந்திக்கிறார்களில்லை.

கோப்பாய் அபேட்சகர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசும்போது தமிழ் மக்கள் தமது சுபூரண உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே தமிழரசுக்கட்சி பாடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டார். மற்றும் பலர் பேசினர்.

# "தியாகத்தின் மூலமே ஓரினம் உரிமை பெறமுடியும்"

## வண்ணார்பண்ணை கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம் திங்கள்

"தியாகம் இன்றி உரிமைப் போராட்டம் வெற்றிபெறமுடியாது" என்று யாழ்ப்பாண மேயர் திரு. க. செ. மகாதேவா வண்ணார்பண்ணையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பிரசாரக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. சி. எக்ஸ். மார்ட்டினை ஆதரித்து நடைபெற்ற இடப்பிரசாரக் கூட்டத்தில் திரு. மகாதேவா மேலும் பேசியதாவது;-

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் 1947-ம் ஆண்டு தமிழ்பேசும் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியிருந்தால் தமிழரசுக்கட்சி தோன்றியிருக்காது. சிங்களம் மட்டும் சட்டத்தை பார்லிமெண்டில் எதிர்த்துப் பேசியதைவிட தமிழரசுக்கட்சியினர் காலிமுகக் கடற்கரை மைதானத்தில் நடத்திய சத்தியாக்கிரகம்தான் அகில உலகத்திற்கும்தமிழர்களின்எதிர்ப்பை உணர்த்தியது.

தமிழர்கள் தமதுஉரிமைகளை பெற்றுக்கொள்ள பார்லிமெண்டினை மட்டும் நம்பியிருக்க முடியாது. பாராளுமன்றத்திற்கு வெளியே நடத்தப்படவிருக்கும் உரிமைப்போராட்ட இயக்கங்களில் தியாக சிந்தையுடன் கலந்துகொள்ள வேண்டும். தியாகத்தின் மூலமே ஓரினம் உரிமைபெற்று வாழ முடியும்.

பாராளுமன்றத்திலோ அல்லது வெளியே உள்ள இயக்கங்களில் தமிழ் மக்களின்சார்பில் கலந்துகொள்ளக் கூடிய தகுதி பிரதிநிதியாக வருபவருக்கு வேண்டும்.

கட்சியானது அரசியல் ரீதியாக இயங்கவேண்டும். கட்சியின் வளர்ச்சிக்கு மக்களின் நன்நம்பிக்கை அவசியமானது. பாராளுமன்றத்தில் வாதாடி மட்டும் உரிமைகள் பெறமுடியாது. பாராளுமன்றத்திற்கு வெளியே நடத்தும் இடக்கங்களின் மூலம்தான் உரிமை பெற முடியும். தலைவர்கள் தொண்டர்களுடன் சேர்ந்து இன்னல்களை அநுபவிக்கத் தயாராக இருக்கவேண்டும்.

திரு. எஸ். முத்தராஜா பேசுகையில் சமஷ்டி ஆட்சியில் பொருளாதார வளம் கிடைக்காது என்பவர்கள் ஒற்றையாட்சி சிவராஜியில் தனித்தமிழ்நாடு அமையுமோம் என்பவர்கள் எப்படி நமது பொருளாதாரத்தை வளம்படுத்த முடியும் என்று கேட்டார்.

யாழ்ப்பாணம் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. சி. எக்ஸ். மார்டின் பேசுகையில் யாழ்ப்பாண மக்கள் இம்முறை தமிழரசுக்கட்சியை ஆதரிக்க வேண்டும் என்றும் தமிழ்பேசும் மக்கள் நலனுக்காக தமிழரசுக்கட்சி பாடுபட்டுவருகிறதென்றும் குறிப்பிட்டார்.

உடுவில முன்னாள் எம். பி திரு வி. தர்மலிங்கம் திருமதி அமிர்தலிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

—

## யாழ்ப்பாணத்தில் சீனர் நடமாட்டம்

யாழ்ப்பாணம் திங்கள்

இரு சீன வாலிபர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சில இடங்களை படமபிடித்துச் சென்றுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது.

இருதினங்களுக்கு முன்னர் காங்கேசன் துறை பலாலி விமானநிலையத்தில் இரு சீன இளைஞர்கள் காணப்பட்டனர். இவர்கள் கமராமூலம் விமானநிலையத்தில் பல படங்கள் எடுத்தனர். இதேபோல பல முக்கியமான இடங்களிலும் இவர்களுடைய நடமாட்டம் காணப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சீன வாலிபர்கள் விமானமூலம் கொழும்பு திரும்பிவிட்டதாகவும் தெரிகிறது.

—

## சமாதான நீதவான்

காங்கேசன்துறை, ஞாயிறு

காரைநகர் கிராமசபையின் புதிய தலைவரான திரு. கா. க. விசுவலிங்கம் சமாதான நீதவானக நியமனம்செய்யப்பட்டுள்ளார். திரு. விசுவலிங்கம் காங்கேசன்துறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# கைதடியில் ஒருவர் கொலை

## வாரண்ட் பிறப்பிக்குமாறு மரணவிசாரணை அதிகாரி உத்தரவு

மட்டுவில், ஞாயிறு

கைதடி கிழக்கைச் சேர்ந்தவரும், சாவகச்சேரி ஆஸ்பத்திரியைச் சேர்ந்தவருமான சண்முகம் ஆறுமுகம் என்பவர் மரத்தால் விழுந்து மரணமனதைத் தொடர்ந்து மரணவிசாரணை நடாத்தச் சென்ற திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம், சண்முகம் ஆறுமுகத்தின் கொலை சம்பந்தமாக விசாரணை செய்த சம்பவம் ஒன்று சென்ற வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது. பொலிசார் மரணவிசாரணை அதிகாரிக்கு அனுப்பிய செய்தியில் சண்முகம் ஆறுமுகம் முதலில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

மரணவிசாரணையில் காலம் சென்றவரின் மனைவியான சின்னம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"நான் சென்ற 24-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் வீட்டு முற்றத்தில் நின்றேன். அச்சமயம் எனது கணவன் ஒரு சைக்கிளில் ஒழுங்கையால் வந்து கொண்டிருந்தார் எனது மகளின் புருஷனும் கந்தன் சுப்பிரமணியம் எனது கணவரின் முகத்தில் அடித்தார். அடித்ததும் கணவர் நிலத்தில் விழுந்து விட்டார் விழுந்ததும் ஐயோ! ஐயோ என்று குழறினார். நான் ஓடிப் போனேன் அப்படி நான் ஓடிப்போக மருமகன் சுப்பிரமணியம் என்னை அடிப்பதாக விரட்டினார். நான் திரும்பி விட்டேன். அப்போது மருமகன் எனது கணவரின் உடம்பில் ஏறி கையால் குத்தினார் கணவரின் சத்தத்திற்கு வேறு ஆட்களும் வந்தார்கள். எனது கணவரின் தலையிலிருந்து இரத்தம் வருவதைக் கண்டதும் அறிவு மயங்கிவிட்டேன். அதன்பிறகு இரவு 10 மணிக்குத்தான் அறிவு வந்தது. அறிவு தெளிந்ததும் புருஷன் எங்கே என்று விசாரித்தேன் என்னுடைய பிள்ளைகள் தங்களுடைய அண்ணன் முத்துக்குமாரசாமி தோட்டத்தில் இருந்து வந்து அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனதாகக் கூறினார்கள். எனக்கு வேறு ஒன்றும் தெரியாது.

இதனைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி திரு அமிர்தலிங்கம் காலம் சென்றவரைத் தாக்கியதாகக் கூறப்படும் கந்தன் சுப்பிரமணியத்தைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்ததுடன் சாவகச்சேரிப் பொலிசாரை இது சம்பந்தமாக உடனடியாகப் புலன் விசாரணை செய்யும் படியும், வேறு சாட்சியங்கள் இருந்தால் உடனடியாக தன் முன்னிலையில் ஆஜர் செய்யும்படியும் உத்தரவிட்டதுடன் யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரியை பிரேத பரிசோதனை செய்யும்படியும் உத்தரவிட்டார்.

மரணவிசாரணை அதிகாரியின் உத்தரவைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிசார் சாட்சிகளாக ஆறுமுகம் முத்துக்குமாரசாமியையும், ஆறுமுகம் சிவஞானத்தையும் மரணவிசாரணை அதிகாரி முன்னிலையில் ஆஜர் செய்தார்கள். அவர்களின் சாட்சியத்தையும் மரணவிசாரணை அதிகாரி பதிவு செய்தார். காலம் சென்றவரின் பிரேதத்தைப் பரிசோதனை செய்த சட்ட வைத்திய அதிகாரி, சாட்சியமளிக்கையில் காலம் சென்றவரின் தலையில் ஏற்பட்ட காயத்திலிருந்து அதிக ரத்தம் பெருகியதால் ஏற்பட்ட மரணம் எனக் கூறினார். மரணவிசாரணை அதிகாரி கொலை எனத் தீர்ப்பளித்தார். காலம் சென்றவரைக் கொலை செய்ததாகக் கூறப்பட்ட மருமகனான கந்தன் சுப்பிரமணியம் தலைமறைவாகத் திரிகிறார்.




குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து வெறுக்கு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

¼ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,

ஆயுர்வேத வைத்தியர்,

161, நோரிஸ் ரோடு,

கொழும்பு-11.


## ஜம்முவில் வெடி விபத்து

ஸ்ரீநகர், பெப். 28

ஜம்முவில் ஒரு சினிமாத் தியேட்டர் முன் ஏற்பட்ட ஒரு வெடிவிபத்தில் ½ பேர் மாண்டனர். 8 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

வெடிவிபத்தைத் தொடர்ந்து ஓடம்பிடிக்க ஒருவரை பொலிசார் துரத்திச் சென்று பிடித்தனர். அவர் கைதுசெய்யப்பட்டார். இது பாகிஸ்தானிய ஒருவரின் சதி எனக் கூறப்பட்டது.

## கதிர்காம மடங்கள் எடுப்பதற்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று நடைபெற்ற சங்கானை பட்டினசபையின் கூட்டத்தில், கதிர்காமத்திலுள்ள மடங்களை அரசாங்கம் எடுப்பதற்கு வன்மையாக கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கதிர்காம மடங்கள் இந்துக்களின் புனித பகுதியாகவிருந்து வருகின்றன என்றும் இதனை அரசாங்கம் எடுக்கக் கூடாதென்றும் அங்கத்தவர்கள் தெரிவித்திருந்தனர். கதிர்காம மடங்களை எடுப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் தீர்மானமொன்று சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கதிர்காம மடங்களை எடுப்பதை ஆட்சேபித்து கலாசார அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீடுகள் தீக்கிரை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம்-டனுவைப் பகுதியிலுள்ள மாதனை மணிகன், மணிக்கன் இத்தியன் ஆகிய இருவருக்கும் சொந்தமான இரண்டு வீடுகள் நேற்று பிற்பகல் பன்னிரண்டு மணியளவில் தீக்கிரையானது. வீடுகளுக்குள் இருந்த துணிகள், நெல்லு, பாய்கள், குடியிருப்பு கோட்டுகள் உட்பட மற்றும் பல உடமைகள் எரிந்து சாம்பலாகிவிட்டன. ரூபா 2500 பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## மகா சிவராத்திரி

சுழிபுரம், திங்கள்

இன்று மகாசிவராத்திரியை முன்னிட்டு ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலில் இரவு அபிஷேக ஆராதனைகளும் நாளைகாலை முருகப்பெருமான் திருவடிநிலையில் தீர்த்த மாடுதலும் நடைபெறும்.

## புதிய உப தலைவர்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபைக் கூட்டம் சபை தலைவர் திரு சு. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. நடப்பு ஆண்டு உபதலைவராக நாலாம் வட்டார அங்கத்தவர் திரு. க. குமாரசாமி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அம்பாறை, ஞாயிறு

இங்கினியாக்கலையில் கடந்த ஒரு கிழமையாக தொடர்ந்து மழை பெய்தது, இதன் காரணமாக சேனநாயக சமுத்திரத்தின் நீர் மட்டம் உயர்ந்திருப்பதால், மீண்டும் இங்கினியாகலையில் மின் உற்பத்தி ஆரம்பிக்கப் பட்டதாக அறியப்படுகிறது.

# "தமிழை வளர்க்க சிங்களவருடன் சேர்ந்து வாழவேண்டும்"

சுழிபுரம், ஞாயிறு

"கிராமப்புற, நகர் புற மக்களுக்கும் விசேடமாக ஏழைக் குடி மக்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் வசதியளிக்கவேண்டும். குறைந்த வீத வட்டியில் ஏழை மக்களும் பணம் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டது ஆனால் இன்னும் இருபது வருடங்கள் சென்றாலும் மக்கள் வங்கி அங்கு தொண்டைச் செய்ய முடியாது. ஒரு கிராமத்திற்கு ஒரு மக்கள் வங்கி இருக்கவேண்டும். அப்போது தான் அந்த மக்கள் தங்கள் தொழிலைச் செய்வதற்கு உதவியாக இருக்கும் தொழிற் பிரச்சினையும் இல்லாது போகும்" என்று சுழிபுரம் கண்ணுவன் சந்தியில் நடைபெற்ற கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியிற் போட்டியிடும் சுயேச்சை அபேட்சகர் திரு தம்பிப்பிள்ளை பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"சிங்கள மக்களுடன் நாம் சேர்ந்து வாழ்வதன் மூலம் தான், நாம் எமது தமிழை உயர்த்த முடியும். ஆனால் மற்றைய சமூகத்தவர்கள் எமது தாய்மொழியை உயர்வாக எண்ணவைக்க வேண்டும். அதுதான் எமக்கு தேவை. எமது மொழி உரிமை எவராலும் என்றும் அழிக்கப்படமாட்டாது; அழிக்கப்படவுமில்லை, மறுக்கப்பட்டுள்ளது. அதை மீட்கவேண்டிய வழி ஒற்றுமை. இன்றைய நிலையிலே தமிழ் மக்களிடையேயுள்ள சகல கட்சிகளும், சமஷ்டி அல்லது இல்லையேல் தனித் தமிழ்நாடு என்று சொல்லிவிட்டது. தனி ராஜ்யம் நமக்குத் தேவையில்லை. ஒற்றுமையாக ஆட்சி செய்து எமது உரிமைகளை மூடியிருக்கும் போர்வையை விலக்க வேண்டும்" மேற்படி கூட்டத்திற்கு திரு. எம். திருச்செந்தூர் தலைமை தாங்கினார். திரு வி. எம். எம். அபுசாலிஹ், சோமசுந்தரம் ஆகியோர் உட்பட பலர் பேசினர்.

# 'கலைக்கு கட்டுப்பாடு கூடாது'

யாழ்ப்பாணம், திங்கள்

"ஈழத்தின் இசை வளர்ச்சியையும் இனத்தின் நலனையும் கருத்திற்கொண்டு இசையாளர்கள் நமது சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டும்" என்று யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசையாளர் சமூக ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

இலங்கையிலுள்ள இசையாளர் சமூக முன்னேற்றம், கலை, பொருளாதார வளர்ச்சி என்பன பற்றி ஆராய்வதற்கான விசேஷ ஆலோசனைக் கூட்டம் திரு. செல்லையா தலைமையில் யாழ்ப்பாணம் கின்னர் லேன் முத்துமாரியம்மன் கோவில் முன்றலில் அமைக்கப்பட்ட முத்தையா சோமு அரங்கில் நடைபெற்றது. திரு. ஞானசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இளைஞர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு இசைப்

(5-ம் பக்கம் பார்க்க)


REGAL — JAFFNA

NOW SHOWING

Joey Dee in TWO TICKETS TO PARIS

ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம்) போன் 485

ஹொன்னப்பா பாகவதர் பி. சரோஜாதேவி நடித்த

மஹாகவி காளிதாஸ்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)

ராஜ் (நீர்கொழும்பு) | விஜயா (மட்டக்களப்பு) | விஜிதா (ஹட்டன்)

கல்யாணி (காவலப்பிட்டி) | மொடேர்ன் (பதுளை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்

தினசரி பி. ப 2-30, 6-30, 10-00. சனி, ஞாயிறு காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00

ஜெமினி கணேசன் – சாவித்திரி (நடித்த)

கற்பகம்

# "வரண்ட பிரதேசத்தை வளமாக்க முடியும்"

வவுனியா, ஞாயிறு

"இலங்கையின் வரண்ட பிரதேச பகுதியை வளமாக்கி இப்பகுதி விவசாயிகளுக்கு பொருளாதார சபீட்சத்தை அஸ்திவாரம் இடுவதற்காக சமூகத்துவேஷம், இனத்துவேஷமற்ற மனப்போக்கில் மகாவலிகங்கையை வடக்கே திருப்பி ஓர் பாரிய நீர்ப்பாய்ச்சல் திட்டத்தை உருவாக்கவேண்டுமென ஆரம்பத்தில் இருந்தே கிளர்ச்சி செய்துவந்தது கம்யூனிஸ்ட் கட்சியே. இது சம்பந்தமாக 1947-ல் திரு. புனங்குளாமையுடன் நான் ஆலோசனை நடத்தியுள்ளது சகலரும் அறிந்ததே" என்று வவுனியா கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு. ஆரியன் குணசேகரா நெரப்பெரிய குளத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக் கூட்டத்திற்கு திரு. டி. டி. பெரேரா தலைமை வகித்தார்.

"என்னை அபேட்சகராக கம்யூனிஸ்ட்கட்சி நிறுத்தியுள்ளது உங்களின் வருங்கால நோக்கத்தை முன்வைத்து இத்தொகுதி உறுப்பினராக, கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகராக அனுப்புவது அவசியம். வவுனியாத் தொகுதிக்கு சுகாதார, போக்குவரத்து, கல்வி, வசதிகள் வேண்டும், காணியின்மை, விநியோகிக்கப்பட்ட காணிகட்கு தண்ணீர் இல்லாதது, பெருங்குறையாகும். அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் வசதிகள் அவர்களுக்கு வந்து சேராததினால், பெரும் சிரமத்துடன் பயிர்செய்யப்பட்டு அறுவடை செய்த நெல் காலதாமதமின்றி சங்கத்துக்கு விற்பனை செய்யமுடியாத நிலைகள் தொடர்ந்திருந்து வருகின்றன. இதன் காரணத்தால் மேற்படி நெல் கறுப்புச்சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. 1957-ம் ஆண்டு வெள்ளத்தால் சேதமுற்ற குளங்கள் இன்னும் திருத்தப்படாமலிருக்கின்றன. இது போன்ற வசதியீனங்களினால் இத்தொகுதி விவசாயிகள் இன்னும் வறுமையினால் வாடுகின்றார்கள். இத்தொகுதியில் உள்ள கடற்தொழிலாளர்களும் ஏனைய தொழிலாளர்களும் கரண்டல்களினாலும் தொழில் பாதுகாப்பு இன்றியும் கஷ்டப்பட வேண்டிய நிலையில் உள்ளனர்" என்றும் அவர் கூறினார். கூட்டத்தில் திருவாளர்கள். சி. அபயரத்தின, டி. குணரத்தின, மூசா ஆசாரி ஆகியோர் செற்பொழிவாற்றினர்கள்.

# "மகாவலி திட்டத்தை சமஷ்டியினரும் ஏற்றுள்ளனர்"

மீசாலை, ஞாயிறு

"தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருந்தபொழுது தமிழ் மொழிக்கு எந்தவிதமாக இழுக்கும் ஏற்படவில்லை. இலங்கை முழுவதும் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் சம அந்தஸ்து இருந்தது. ஆனால் சமஷ்டிக் கட்சியினர் பெரும்பான்மையாகச் சென்றபொழுதுதான் சிங்கள மொழி மட்டும் கொண்டுவரப்பட்டது. இம்முறையும் சமஷ்டிக் கட்சியை அனுப்பினால் சிலவருடங்களுள் இலங்கை ஒரு சிங்கள நாடாகிவிடும்."

பனை சந்தையில் நேற்றிரவு கிளிநொச்சி தொகுதி தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு வி. குமாரசாமியை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசும்போது கூறினார். இக் கூட்டத்திற்கு மூசமாலை கிராம சபைத் தலைவர் திரு. சின்னதுரை தலைமை வகித்தார்.

கிளிநொச்சித் தொகுதி தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு. வி. குமரசாமி பேசும்போது கூறியதாவது: மகாவலிகங்கையை சேனாபோத்தலை உடைத்து கொண்டுவருவதுபோல கொண்டுவர போகிறார் என மட்டக் களப்பு முன்னாள் எம் பி. கேலி செய்தார். இன்று அக்கட்சியின் ஏடு, மகாவலி கங்கையைக் கொண்டுவர முடியும் என ஒத்துக் கொண்டது. சமஷ்டி கட்சி மட்டுமல்ல. கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சியினரும் மகாவலிகங்கையை திருப்ப முடியும் எனக் கூறுகின்றனர். நான் கடந்த 10 வருடங்களுக்கு முன்பே இந்த யோசனையைக் கூறிவந்தேன். கிளிநொச்சித் தொகுதி முன்னேற வேண்டிய ஒரு தொகுதி. குடியேற்றத் திட்டங்கள் மூலம் இத்தொகுதியில் மேலும் 3 புதிய தொகுதிகளை உருவாக்கி பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளை அதிகரிக்கச் செய்வேன்

காங்கேசன்துறை அபேட்சகர் திரு. ஸ்ரீபாஸ்கரன், திருவாளர்கள் என். எஸ். சேதுகாவலர், பழமுதிச்சோலையான் மற்றும் பலர் பேசினர்கள்.

# "கலைக்கு கட்டுப்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை நிறுவ முயற்சிகள் மேற்கொண்டோம் நமது சமூகத்தில் காணப்பட்ட பிளவு மனப்பான்மை இந்த முயற்சியை நிறைவேறுது செய்துவிட்டது. கலைக்குத் தடைபோ, கட்டுப்பாடோ ஏற்படுத்துவது விரும்பத்தக்கது அல்ல நமது நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொண்டே கட்டுப்பாடு விதித்தல் தக்கது".

திரு. து. இரத்தின கோபால் பேசும் போது, இசையாளர் சமூகத்தில் காணப்படும் பிரிவு மனப்பான்மையை கைவிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இசையாளர் சமூகத்தின் பிரச்னைகள் பற்றி ஆராயப்பட்ட போது கூட்டத்தில் ஏற்பட்ட கலவரம் காரணமாகக் கூட்டம் பின்போடப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதம்

## விளக்கம் தருவார்களா?

சடந்த புதன்கிழமை இரவு ஏழரை மணியளவில் நட்சத்திரம் போன்ற ஒரு வஸ்து மேற்குவானத்திலிருந்து வடமேற்குத் திசையாகச் செல்வதைக் கவனித்தேன்.

இது விமானமாயிருந்தால் கொஞ்சமாவது சத்தம் கேட்டிருக்கும். வானவெளி ஆராய்ச்சி பலூனாய் இருந்தால் சோழகக்காற்றுக்கு தென்மேற்கிலிருந்து வடமேற்காகவும் வாடைக்காற்றுக்கு வடகிழக்கிலிருந்து தென்மேற்காகவும் போயிருக்கும்.

சுமார் 10 நிமிடங்களுக்குள் அந்த வஸ்து வானத்தைக் கடந்துவிட்டது. இதைப்பற்றிய விளக்கம் யாராவது தருவார்களா?

'வி. என். பி.'

நவாலி,
26-2-65.

## பிரசார இயக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதியில் தமிழரசுக்கட்சிப் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளுமுகமாக மலையகத்திலிருந்து பலர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

மலைநாட்டுத் தொழிலாளர் சமூகப் பிரதிநிதிகள் பலரும் இங்கு வந்துள்ளனர்.

# "ஒன்றுபட்ட ஓற்றையாட்சி உருவாக்கப்பட வேண்டும்"

## தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், திங்கள்

சாதி, மொழி, சமயம் என்னும் வேறுபாடுள்ள மக்கட் தொகுதியினர், தன்மானத்தோடும் கண்ணியத்தோடும் எம்முன்னோர்களிதத பொதுவான அருஞ்செல்வத்தில் சம பங்குடையவர்களாகவும் சம அந்தஸ்தையும், சம வாய்ப்புக்களையும் பெற்றவர்களாயும் இங்கெங்கும் வாழத்தக்கதொரு ஒன்றுபட்ட ஒற்றையாட்சியுடைய இலங்கையை உருவாக்குவதையே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனது இலட்சியமாகக் கொண்டு, அதற்காக இதுகாறும் முயன்று வந்தது போன்று இனியும் அதையே இலட்சியமாகக் கொண்டு முயலும்" என்று, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது.

"தமிழ் பேசும் மக்கள் ஏற்கனவே அனுபவித்து வந்த உரிமைகள் தேய்ந்து, மாய்ந்து போனதற்கும், போற்றிப் பேணி வந்த உரிமைகளும், அனுபவித்து வந்த செல்வாக்கும் சிறிது சிறிதாக அகற்றப்பட்டதற்கும் காரணம் தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகள் பறிபோவதைக் கண்டு உணர்ச்சியின்றி அசிரத்தையோடு இருந்ததல்ல அநீதியை எதிர்க்கவும் போராட்டங்களை நடத்தவும் ஏறமன உறுதி இல்லாமல் போனதல்ல. சிங்கள மக்களும் சிங்களத் தலைவர்களும் தமிழர்களுடைய இல சிலங்களையிட்டும் எண்ணங்களையிட்டும் விசுவாசத்தையிட்டும் மிகவும் சந்தேக முள்ளவர்களாகவும் அவநம்பிக்கை உள்ளவர்களாகவும் ஆகிவிட்டதே முக்கிய காரணம்.

பிரிவினை செய்வது, கூறு செய்து ஒதுங்கிக் கொள்வது, கட்டை பிளவு படுத்துவது என்னும் கொள்கைகளை பிரதானமாகக் கொண்ட கட்சியெனச் சிங்கள மக்களால் இனங்காணப்பட்டதொரு கட்சி தமிழ்பேசும் மக்களது அடிப்படை உரிமைகளையும் கோரிக்கைகளையும் சமர்ப்பிக்கவும், அம்மக்களை வழி நடத்தவும் ஏற்பட்டிருப்பதே அந்தச் சந்தேகத்துக்கும் அவநம்பிக்கைக்கும் காரணமாகும்.

மொழியுரிமையையும், முன்னேற்ற வாய்ப்புக்களிலும், சமஉரிமையாகச் சேவையிலும் அந்தஸ்தோடு கூடிய அடிப்படை உரிமைகள் அனைத்தையும் தமிழ் பேசும் மக்கள் பெறவிரும்பினால், ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்ட தொரு கட்சியின் பெயராலேயே இக்கோரிக்கைகள்

(6-ம் பக்கம் பார்க்க)

# கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் மத்திய கல்லூரிக்கும், குருநாகலை மாலிகதேவா கல்லூரிக்குமிடையில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி தனது முதல் இனிங்ஸில் 202 ஓட்டங்களை எடுத்ததும் பற்குணராஜா 63 ஓட்டங்களையும், கங்காதரன் 62 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். மாலிகதேவா கல்லூரி தனது முதல் இனிங்ஸில் 140 ஓட்டங்களை எடுத்தது. யாழ். மத்திய கல்லூரி தனது இரண்டாவது இனிங்ஸில் தேநீர் இடைவேளைக்கு முன்னதாகவே 5 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 114 ஓட்டங்களை எடுத்து தனது ஆட்டத்தை முடித்துக்கொண்டது பற்குணராஜா 58 ஓட்டங்களை எடுத்தார். மாலிகதேவா கல்லூரி இரண்டாவது இனிங்ஸில் மொத்தம் 120 ஓட்டங்களை எடுத்தது. இப்போட்டியின் முடிவில் வெற்றி தோல்வி எக் கல்லூரிக்கென சொல்ல முடியாதளவில் விறுவிறுப்பாக இருந்தது. யாழ் மத்திய கல்லூரி வீரர்களாகிய அம்பலவாணர், டொனல்ட், சண்முகலிங்கம் ஆகியோரின் திறமையான பந்து வீச்சினால் யாழ் மத்திய கல்லூரி 6 விக்கட்டுகளினாலும் 46 ஓட்டங்களினாலும் மாலிகதேவா கல்லூரியைத் தோற்கடித்தது. மாலிகதேவா கல்லூரி காப்டன் குணரத்தின சகல துறைகளிலும் சிறந்து விளங்கினார். இப்போட்டிக்கு ஞானசேட்ணம், சுப்பிரமணியம் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

**சென். பற்றிக்ஸ் வெற்றி**

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில். யூனியன் கல்லூரி தனது முதல் இனிங்ஸில் 111 ஓட்டங்களை எடுத்தது சென். பற்றிக்ஸ் கல்லூரி முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 265 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. அன்ரன், சத்தியசீலோ, மகேந்திரன் முறையே 76, 56, 45 ஓட்டங்களை எடுத்தனர் யூனியன் கல்லூரி இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகள் நஷ்டத்துக்கும் 45 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது டெனிஸ், அன்ரன், முறையே 5 5 விக்கெட்டுகளை கைபபற்றினர். சென் பற்றிக்ஸ் கல்லூரி இனிங்ஸ் வித்தியாசத்தில் யூனியன் கல்லூரியைத் தோற்கடித்தது. ஆப்போட்டிக்கு ராமநாதன், மாக்

(6ம் பக்கம் பார்க்க)

வாடகைக்கு

யாழ்ப்பாணம் பழைய பஸ் நிலையத்திற்கு வடக்கே மேல் மாடி அறைகள் வாடகைக்கு உண்டு. விபரம்: 39, விவேகானந்தா வீதி, வெள்ளவத்தை 1712

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்காவிடில் சைவம் எப்படி வளரமுடியும்?

* * *

எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி எரிசுடராய் நின்ற இறைவா போற்றி, கொல்லார் மழுவாட் படையாய் போற்றி கொல்லுங் கூற்றொன்றை புதைத்தாய் போற்றி, கல்லாதார் காட்சிக்கரியாய் போற்றி கற்றார் இடும்பை களைவாய் போற்றி, வில்லால் வியனரணை மெய்யாய் போற்றி வீரட்டங் காதல் விமலா போற்றி.

— அப்பர் சுவாமிகள்.

CLASSES

Admissions now accepted for B.A . G A Q G C E Advanced Level-Arts/Scierce; G C E Ordinary Level Arts Science / Commerce; G C E Prep Sci-nce; Euglish / Tamil Shorth nd T pewriting Book keeping Commerce; S nhala; Central Clerical; Technical Collоge Ent ance; Special evening classes in Engl sh, Mathemetics, Physi s Chemistry. Biolog Tamil History. Geography Government Economics; Boarding / Lodging facilities availanole, UNITED INSTITUTES Nelliady Karaveddi, 107 Point Pedro Road, Nallur, Jafina. 1734

S. R. S.
ஜவுளி மாளிகையில்

6 யார், 7 யார் கைத்தறிச் சேலைகள் 100-ம் நம்பர் 120-ம் நம்பர் நூல்னால் எங்கள் சொந்த தறிகளில் தயார் செய்யப்பட்ட சித்தாடைகள் நிறைந்த சேலைகள் விற்பனைக்குத் தயாராகவிருக்கிறது

6 யார், 7 யார் லங்கா சேலைகளும்; லங்கா வேட்டி சால்வைகளும் மலிவான விலைகளில் கிடைக்கும்

சங்கக் கடைகளுக்கும், வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவு உண்டு

எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்
போன்: 296.

லொறி ரயர்கள் விற்பனை

எம்மிடம் பாவிக்க கூடிய நிலைமையிலுள்ள 750 × 20 "மிச்சிலின்" ரயர்கள் மூன்றும், "பயஸ்ரோன்" ரயர்கள் இரண்டும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

கேள்விப்பத்திரங்கள், தபால் உறையில் "ரயர் கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டு, ஒவ்வொரு ரயருக்கும் தனித்தனி விலை குறிப்பிடப்பட்டு 6-3-65 பகல் 12 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப் படவேண்டும்.

காரியாலய நேரங்களில் ரயர்களைச் சமாசத்தில் பார்வையிடலாம்.

காரியதரிசி,
தென்மராட்சி ப. நோ. கூ. ச. சமாசம்,
சாவகச்சேரி,
26-2-65 1640

மரண விளம்பரம்

விற்பனைக்கு

"டோக்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்

எவர்சில்வர் மாளிகை,
241, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம், 1743

பி எம். ஏ. மாடல் மொடல் 4 ஸ்ரீ 2778 மோட்டார் வண்டி விற்பனைக்கு. தொடர்பு கொள்க: பிளாசா தேயிலை கம்பெனி, 36, முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். 1741

தேவை

கைத்தறி நெசவாளருக்கு, புடவை நெசவை அறிந்த பெண்கள் தேவை. ராஜரூம்ஸ், 54-60, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1738

கைத்தறி நெசவாளருக்கு பெண் புடவை நெசவாளர்கள் தேவை. ராஜரூம்ஸ், 54-60, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1739

"சிவராத்திரி - பகல்"
இரண்டிலும்
மகத்தான ஆராய்ச்சி!

ஆன்மாக்கள்:— உலகின் திசைகளிலும் வேறாகப் பிரிந்ததேன்! ஒழுக்கமாகவும்-ஒழுக்கமற்றதுமேன!

ஆணாகவும் - பெண்ணுருப் பிணராகவும்— அலியுருப்பிணராகவும், இக்குணங்கள் மாறியும், செயல்கள்-உடுப்புக்கள் - தின்டிகள்-தின்டாட்டங்கள் - மயக்குவேலைகள். ● பஞ்சமாபாதகங்களாகியும், அருவருக்கத்தக்கனமாகியும், கட்டறுந்து வாழப்பிறந்ததேன்!

"சிறுபான்மையும் -ஒதுக்கப்பட்டவரும்" உண்மையில் புண்ணியத்திலா! பாவத்திலா! ஆராயுங்கள்!! "சிரமதானம்" எதில் அவசியம்! போற்றியென் வாழ்முதலாகிய பொருளேபுலர்ந்தது" எந்த ஆன்மாவின் ஆராய்ச்சி? (அறிவுப் பிரதிகள் விலை:— ரூபா 1-) வித்துவக்கலைகள், சன்மார்க்க தவகூடம், கந்தரோடை. 1740

# இந்திய பட்ஜட்டில் 10 கோடி உபரி

## அத்தியாவசிய, தனியார், கைத்தொழில் வரிகள் குறைக்கப்பட்டுள்ளன

புதுடில்லி, பெப். 28

பத்துக்கோடி ரூபா மிகு உபரியாக உள்ள 1965-66-ம் நிதிஆண்டுக்கானவரவு செலவு திட்டத்தை இன்று நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி லோகசபையில் சமர்ப்பித்தார்.

மக்களின் அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக வருமான வரியில் 39 கோடி 50 லட்சம் ரூபா குறைந்துள்ளது. பொதுமக்களின் கஷ்டத்தை நீக்கும் நோக்குடனேயே இவ்வரிக் குறைப்பு செய்யப்பட்டதெனவும், இதனால் மக்கள் நேரடியாகப்பயனடையாவிடில் திருப்பவும் வரிகள் அமுலாக்கப்படும் என நிதிமந்திரி வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்தபோது கூறுகையில் தெரிவித்துள்ளார்.

துணிவகைகள், பருத்தி நூல்கள், பத்திரிகை காகிதம், உட்பட பல பொருட்கள் மீது வரிக்குறைப்பு விதிக்கப்பட்டுள்ளது. பல கைத்தொழில்களுக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டதுடன் உல்லாசங்கள் போன்ற பொருட்கள் மீதுவரி விதிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையான ஒருவர் 4,800 ரூபாவுக்கும் குடும்பஸ்தர் ஒருவர் 3,500 ரூபாவுக்கும் தனி பொருவர் 2,000 ரூபாவுக்கும் அதிகாக வருமானம் பெற்றால் தான் வரிவிதிக்கப்படும்.

பதுக்கப்பட்ட பணத்தைப் பற்றி தெரிவிப்பதற்கு காலவரையறை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

## பஸ் சேவையை விஸ்தரிக்குக

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறை - தாளையடி பஸ் சேவையை பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு ஆழியவளை வரை விஸ்தரிக்கும்படி தாளையடி பஸ் பிரயாணிகள் சங்கம் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவுக்கு விஜயம்செய்த போக்குவரத்து அமைச்சர் திரு. அனில் முனசிங்காவிடம் கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

குடத்தனைக் கிராமசபையின் தலைவர் திரு. எம். மரியாம்பிள்ளை பருத்தித்துறை - நாகர்கோவில் பஸ்சேவையை மணற்காட்டிற்கும் விஸ்தரிக்கும்படி அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

ரோட்டுச் சீராக்கப்பட்டதும் பஸ் சேவை நடைபெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் கூறினார்.

## இளம் பெண் குத்திக் கொலை
### கணவனுக்கு ரிமாண்ட்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிகொச்சியைச் சேர்ந்த கந்தையா பாலசுப்பிரமணியம் தமது மனைவி சரஸ்வதியைக் குத்திக்கொலை செய்ததாகச் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் சந்தேக நபரை 1-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

## கி. ச. தலைவர்தெரிவு

ஊர்காவற்றுறை, சனி

காரைநகர் கிராமசபையின் புதிய தலைவராக 14-ம் வட்டார அங்கத்தவர் திரு. கே. கே. விசுவலிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## 'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

ஈழநாடு சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்கு அன்பர்கள் தொடர்ந்து உதவிகள் அளித்து வருகின்றனர். நேற்றுப் பிற்பகல் வரை இந்நிதிக்கு பணமாகவும் பொருளாகவும் மொத்தம் 26,565 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது. நேற்றுக் கிடைத்த வசூல் விபரம்:

| | |
|---|---|
| கே. சிதம்பரப்பிள்ளை சுழிபுரம். | 10-00 |
| சி. மாரிமுத்து, சுழிபுரம். | 10-00 |
| மு. சீவகுரு, சுழிபுரம். | 5-00 |
| ச. வயித்திலிங்கம், சுழிபுரம் | 5-00 |
| மு. திருச்சபகநாதர், சுழிபுரம். | 5-00 |
| டபு. அம்பிலபாகன், சுழிபுரம். | 3-00 |
| ச. சின்னத்தம்பி, சுழிபுரம். | 2-00 |
| க. பஞ்சலிங்கம். வட்டுக்கோட்டை | 5-00 |

### மாத உதவித் திட்டம்

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண மாத உதவித்திட்டத்துக்கு இரண்டாவது தவணையாக நேற்று பணம் செலுத்தியவர்கள் விபரம்:

| | |
|---|---|
| ஓர் அன்பர், கெக்கிராவ, சரவெட்டி. | 25-00 |
| சண்முகம், சின்னச்சிப்பிள்ளை சிவன்வாசம், கீ வேலி. | 25-00 |
| ஓர் அன்பர், தெமட்டைக்கொடை | 25-00 |

## 'ஒன்றுபட்ட . . .
(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் திடமாக நம்புகின்றது.

சமஷ்டி அரசியல் இலங்கைக்கு கூடாதென்றும் தமிழ் பேசும் மக்களுக்கு மிகவும் கூடாதென்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ மனப்பூர்வமாகவும் திடமாகவும் நம்புகின்றது. தெரிவு வளர சிங்களக் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுச் சமஷ்டி அரசியலை எதிர்க்கின்றன என்ற காரணத்தால் அவ்வரசியலை நாம் அடைய வேண்டிய சிறந்த பரிசு என்ற விபரீத சிந்தனையை மனதில் வைத்திருக்க வேண்டாமென்று தமிழ் பேசும் மக்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

சமஷ்டிக் கோரிக்கையோடு தொடர்புள்ள எவரையும் பார்லிமெண்டுக்கு உறுப்பினர்களாய்த் தேர்ந்து அனுப்பும் பட்சத்தில் தமிழ் பேசும் மக்கள் தமது அடிப்படை உரிமைகளையோ, இதுகாறும் போற்றிப் பேணிவந்த உரிமைகளையோ திரும்பப் பெறும் வாய்ப்புச் சற்றேனும் கிடையாது போய்விடுமென்று அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ தமிழ் பேசும் மக்களுக்கு எச்சரிக்க விரும்புகிறது.

இனம், மதம், சாதி, கொள்கை என்ற வேறுபாடு பாராட்டாத வகையில், எல்லாப் பிரஜைகளுக்கும் சட்டத்தில் சமத்துவமும், சமமான சட்டப்பாதுகாப்பும் அளித்தல்.

சருத்துரிமை, மத உரிமை, பேச்சுரிமை, கூட்டுரிமை போன்ற உரிமைகள் எல்லோருக்கும் அளிக்கப்படல்.

ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுகின்ற அல்லது, சமயத்தைச் சார்ந்த சிறுபான்மை இனத்தவர்கள் தமது விருப்பத்தின்படி ஒரு கல்வி ஸ்தாபனத்தை நிறுவி நடத்த உரிமை பெற்றிருத்தல்.

இலங்கையின் ஒரு அரசாங்க மொழியாகவும், தேசிய மொழியாகவும் தமிழ் அங்கீகரிக்கப் படுவதற்கு ஆவன செய்வோமென்று உறுதி கூறுகின்றோம். சிங்கள மக்களுக்கு சிங்கள மொழி எப்படியோ, அதே போல தமிழ் பேசும் மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்குத் தாய் மொழி இருத்தல் வேண்டும். அதாவது இலங்கை முழுவதிலும் சிங்களத்துடன் தமிழுக்கும் சமத்துவம் பெறுவது."

மேற்குறிப்பிட்ட விபரங்கள் காங்கிரஸ தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## கிரகமண்டல . . .
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கு யாழ்ப்பாணம் பகுதிகளிலிருந்து தினமும் அதிகமான மாணவர்களும் பொதுமக்களும் செல்வதால் பலர் யாழ்ப்பாணத்திலிருந்து நின்றுகொண்டே ரயிலில் செல்ல வேண்டியிருக்கிறதென்றும் அப்படிச்சென்றும் அங்கு பல மணி நேரம் வரை 'கியூ' வரிசையில் காத்திருக்கவேண்டியுள்ளதென்றும் பலமாணவர்களும் பொதுமக்களும் ரயில்வே மனேஜர் திரு. ரம்பலாவிடம் புகார்செய்துள்ளனர். இதுசம்பந்தமாக போக்குவரத்து மந்திரியைக் காணவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விசேஷ ரயில் சேவையொன்றை விடும்படி இவர்கள் கோரியுள்ளனர்.

## கிரிக்கட்...
(5ம் பக்கத் தொடர்ச்சி)

கல் தம்பையா மத்தியஸ்தம் வகித்தனர்

### சென். ஜோன்ஸ் வெற்றி

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கண்டி சில்வெஸ்டர் கல்லூரிக்குமிடையில் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென் ஜோன்ஸ் வெற்றி பெற்றது. சென். சில்வெஸ்டர் கல்லூரி இரண்டு இன்னிங்ஸிலும் முறையே 140, 150 ஓட்டங்களை எடுத்தது. சென ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 241 ஓட்டங்களை எடுத்தது. சூரியகுமார், முத்ததம்பி, கனகதுரை முறையே 62, 53, 45 ஓட்டங்களை எடுத்தனர். இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை நஷ்டத்துக்கு 54 ஓட்டங்களை எடுத்து சென் சில்வெஸ்டர் கல்லூரியை 5 விக்கட்டுகளால் தோற்கடித்தது. இடபோட்டிக்கு சனகசிங்கம், பிலிப்ஸ் மத்தியஸ்தம் வகித்தனர்.

## கலாச்சார சுற்றுப்பிரயாணம்

சுழிபுரம், ஞாயிறு

யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசத்தினர் ஒரு கலாச்சார சம்பந்தமான சுற்றுப் பிரயாணத்தை நேற்றைய தினம் ஆரம்பித்தனர். இக் கோஷ்டியினர் விசேட பஸ்வண்டி ஒன்றில் சமாச செயலாளர் தலைமையில் மாவிட்டபுரத்தில் இருந்து புறப்பட்டனர்.

## திறக்கப் பட்டது

அம்பாறை, ஞாயிறு

கல்லோயா அபிவிருத்திச் சபையால் நடாத்தப்படும் இக்கினியாகல ஓய்வு விடுதி மக்களின் உபயோகத்துக்கென்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இந்த வாடிவீடு பலமாதங்களாக மூடப்பட்டு கிடந்தது என்பது வாசகர்களுக்குத் தெரிந்ததே.

## நியமனம்

சாவகச்சேரி, ஞாயிறு

முன்னாள் கைதடி நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு வேலாயுதர் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு உத்தியோகப் பற்றற்ற பரிசோதகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# 'முதலில் எதிர்த்தார்கள்; பின்பு ஏற்றுக்கொண்டார்கள்'
## சமஷ்டியினரின் நிலைபற்றி ஜி. ஜி.

மீசாலை, ஞாயிறு

"சமஷ்டிக்கட்சியினர் கடந்த எட்டு வருட காலமாக சிங்களத் தனிப்பட்டை ஆரம்பத்தில் எதிர்த்தபோதிலும் கடைசியில் மறைமுகமாக ஏற்றுக்கொண்டார்கள் என்பதற்குப் பல சம்பவங்களைக் கூறலாம் ஆனால் தமிழ்க்காங்கிரஸ இலங்கையில் தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து இருக்க காலத்திலும் சரி, சிங்களமொழி கொண்டுவரப்பட்ட பின்பும் சரி பல விஷயங்களை எதிர்த்து வெற்றி பெற்றுள்ளது நானும் திரு. சுந்தரலிங்கமும் பாராளுமன்றத்தில் இல்லாத சமயம் சிங்களத்தை இலங்கை முழுவதும் அமுல் செய்தார்கள். அதற்கு சமஷ்டிக்கட்சியினர், மறைமுகமாக ஆதரவு தெரிவித்து பாராளுமன்றத்தில் எந்தவித மான எதிர்ப்பும் காட்டாமல் பேசாமல் இருந்தார்கள். நானும், திரு. சுந்தரலிங்கமும் பாராளுமன்றத்தில் இருந்திருந்தால் சிங்களமொழி அமுல் தடுத்து நிறுத்தியிருப்பேன்".

கைதடி சந்தை மைதானத்தில் சாவகச்சேரித் தொகுதி தமிழ்க்காங்கிரஸ அபேட்சகர் திரு. எம். சிவானந்தன் ஆதரித்து நடைபெற்றக் கூட்டத்தில் தமிழ்க்காங்கிரஸ தலைவர் திரு திரு ஜி ஜி பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்

திரு க. பாண்டியர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஜி ஜி பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

சமஷ்டிக்கட்சியினர் பற்பல ரூபங்களில் வந்த சிங்களத் தனிப்பை மறைமுகமாக ஏற்றுக்கொண்டார்கள். மக்களை ஏமாற்றுவதற்காக எதிர்ப்புக் காட்டினார்கள். மந்திரிகளிடம் சலுகைகள் பெற ஏற்றுக்கொண்டார்கள். தனிச்சிங்களச் சட்டத்தை சமஷ்டியினர் முதலில் எதிர்த்தார்கள் பின் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் மூலம் இலங்கை முழுவதும் தனிச் சிங்களத்தை ஏற்றுக்கொண்டார்கள். இதுமட்டுமல்ல,56-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நடைபெற்ற மொழி விவாதத்தின்போது, காங்கேசன்துறை கோப்பாய் எம். பி. திரு. கு வன்னியசிங்கமும் காங்கேசன்துறைகாவற்றுறை எம் பி திரு.அ. ஏ. கந்தையா அம்டீ ரகசமாக சிங்களமொழியை இலங்கை முழுவதும் ஏற்றுக்கொள்வதாகக் கூறினார்கள் 1956-ம் ஆண்டு ஜூலைமாதம் 13-ந் திகதி ஹன்சாட்டில் 1666-ம் பக்கத்திலும், 1956-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ந் திகதி ஹன்சாட் 1264-ம் பக்கத்திலும் இது இருக்கிறது இதை யாரும் மறுக்க முடியாது.

பிரஜா உரிமைச் சட்டம் முதன்முதலில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது தமிழ்க்காங்கிரஸ எதிர்த்தது. அச்சட்டத்தின் மூலம் பிரஜா உரிமை இழந்த மக்களுக்கு பிரஜா உரிமை கொடுக்க வேண்டுமென்று வாதாடி வெற்றி கண்டது தமிழ்க்காங்கிரஸ தமிழ்க்காங்கிரஸின் முயற்சியினால் இந்தியர்களுக்கு பிரஜாஉரிமை மீண்டும் வழங்கும் பொருட்டு, இந்தியர் - பாகிஸ்தானியர் பிரஜாஉரிமைச்சட்டம் மீண்டும் கொண்டு வரப்பட்டது. 15 வருடகாலம் இலங்கையில் வசித்தவர்களுக்குத்தான் பிரஜா உரிமை என்று அன்றைய அரசாங்கம் பிடிவாதமாக இருந்தபோதிலும், 5 வருடங்கள் இலங்கையில் வாழ்ந்தவர்களுக்கு பிரஜா உரிமை வழங்கவேண்டுமென்று வாதாடி வெற்றி கண்டது தமிழ்க்காங்கிரஸ

சாவகச்சேரித் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு எம் சிவானந்தன் பேசியபோது கூறியதாவது:

பாராளுமன்றத்தில் தமிழ்க் காங்கிரஸ பெரும்பான்மையாக இருந்த சமயம் இலங்கை முழுவதும் தமிழுக்கு சம அந்தஸ்து இருந்தது. ஆனால் சமஷ்டிக்கட்சியினர் எப்பொழுது பெரும்பான்மையாக பாராளுமன்றத்தில் காலடி எடுத்து வைத்தார்களோ அன்றுமுதல் தனிச்சிங்களம் இலங்கை முழுவதும் உத்தியோக மொழியாகக் கொண்டு வரப்பட்டது. சில சலுகைகளுக்கு, ஆசிரியர்களுக்கு இடமாற்றமும், சொந்தக்காரர்களுக்கு உத்தியோகம் எடுப்பதற்கும் பாராளுமன்றம் செல்லவேண்டுமா? இதெல்லாம் சாதாரணமான விஷயங்கள் ஆனால் நாது இழந்த உரிமையைப் பெறுவதற்காகத் தான் பாராளுமன்றம் செல்ல வேண்டும்

சாவகச்சேரி முன்னாள் எம் பி திரு வி குமாரசாமி பேசும் போது கூறியதாவது:

ஆரம்பத்தில் மகாவலிகங்கையைத் திருப்ப முடியாது என்று கூறி கேலி செய்த சமஷ்டிக்கட்சியினர் இன்று திருப்ப முடியும் என ஒத்துக் கொண்டார்கள் ஆனால் இதற்கு 80 கோடி ரூபா வேண்டுமென்று கூறினார்கள் தமிழ் மக்களின் நன்மைக்காக 80 கோடியல்ல 800 கோடி ரூபாவும் நான் வாதாடிப் பெற்றுக் கொடுப்பேன்.

திரு ஸ்ரீபாஸ்கரன், திருவாளர்கள் ஸ்ரீதரன், துரைராசா, பழமுதிர் கோவயான், செல்வி ஜெயமணி சின்னத்துரை மற்றும் பலரும் பேசினார்கள்


# அருத எண்ணெய்

(அறுபதாம் பச்சையும் வேறு 44 அரிய மூலிகைகளும் சேர்ந்தது)

கூந்தலை அடர்த்தியாகவும் நீளமாகவும் வளர்க்கும், தலைமயிர் உதிர்வதையும், நரைப்பதையும் தடுக்கும். பினிசத்தை முற்றாக குணப்படுத்தும்.

மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்களுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். கண் எரிச்சல், காது இரைச்சல், காதில் சீழ் வடிதல், அடிக்கடி சூலதோஷம் பிடித்தல், தும்மல், தலையிடி ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.

சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்

முழுப்போத்தல் ரூபா 10-00 அரைப்போத்தல் ரூபா 5-00
கால் போத்தல் ரூபா 3-00 2 அவு. போத்தல் ரூபா 1-00

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்:

வைத்தியர் பி. எம். திசாநாயக்க, கம்பளை.

யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்

எஸ். சுப்பிரமணியம் அன் கோம்பனி

53, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.

( தொலைபேசி: 541 )


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.